# டெங்கு காய்ச்சல் தடுப்பு நிலவேம்பு குடிநீர் வழங்கும் முகாம் 24, 25, 26.10.2018

கும்பகோணத்தை அடுத்துள்ள கோவிலாச்சேரியில் இயங்கி வரும் அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம் அலகு – I,II,III மற்றும் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை சித்த மருத்துவ பிரிவு இணைந்து நடத்திய டெங்கு காய்ச்சல் தடுப்பு நிலவேம்பு குடிநீர் வழங்கும் முகாம் 24,25,26.10.2018 ஆகிய மூன்று நாட்கள நடைப்பெற்றது. இந்த நிகழ்ச்சியை அன்னை கல்வி குழும செயலர் திரு.எம்.ஐ.ஹுமாயுன் அவர்கள் துவங்கி வைத்து நிகழ்ச்சியை தலைமை தாங்கினார். அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் திருமதி Dr.S.P. மாணிக்கவாசுகி அவர்கள் மற்றும் துணை முதல்வர்கள் திரு எஸ்.இளஞ்செழியன்,திரு.கே.ராஜா ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்து சிறப்பு விருந்தினருக்கு சிறப்பு செய்து வாழ்த்துரை வழங்கினர். இதில் Dr.M.C.ரிஷிகேஷ் (உதவி மருத்துவ அலுவலர்-ஆயர்வேதா),Dr G.பாஸ்கரன் (உதவி மருத்துவ அலுவலர்-சித்தா) மற்றும் திருமதி.பி.மீனாட்சி(மருந்தாளர்) ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு டெங்கு காய்ச்சல் எவ்வாறு உருவாகிறது,அதை நாம் எவ்வாறு தடுக்க வேண்டும்,நிலவேம்பு குடிநீரின் நன்மைகள்,மேலும் குடிநீரை எவ்வாறு தயாரித்து பயன்படுத்த வேண்டும் என்பன போன்றவற்றை சிறப்புரையாக வழங்கினர். இறுதியாக எஸ்.சோமசுந்தரம் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் நன்றியுரை கூறினர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை திரு.எஸ்.சுரேந்திரன் மற்றும் எஸ்.அனிதா நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் ஏற்பாடு செய்தனர். இந்நிகழ்வில் சுமார் 3000க்கு மேற்ப்பட்ட அன்னை கல்வி குழும மாணவர்கள் கலந்து கொண்டனர்.




Annal College of Arts & Science
Quality Education for Today & Tomorrow

